**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 32/2022 |
| Name | : Mohammed Riyaz |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சோழமாதேவியில் வசித்து வருகிறேன். கறி கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 24.09.2021 ம் தேதி இரவு 08.30 மணிக்கு துக்கராஜ் எனக்கு போன் செய்தார். சோழமாதேவி குளத்திற்கு வரச்சொன்னார். எங்களுக்கும் அவர்களுக்கும் ஏற்கனவே கபடி விளையாடுவது சம்மந்தமாக விரோதம் இருந்து வந்தது. நான் அங்கு சென்றேன் இரவு 08.45 மணிக்கு துக்கராஜ் என்னை குளக்கரையில் வைத்து கீழே தள்ளிவிட்டார். அவருடன் இருந்த சுமார் 6-7 நபர்கள் என்னை கட்டை மற்றும் கம்பியால் தலை, தோள் மற்றும் காலில் அடித்தார்கள். எனக்கு காயம் ஏற்பட்டது. என்னை அடித்து விட்டுஅவர்கள் அங்கிருந்து ஓடி விட்டார்கள். நான் ஆம்புலன்ஸ் மூலமாக மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு வந்தேன் அங்கிருந்து உடுமலை கணேஷ் மருத்துவமனைக்கு சென்றேன். என்னை மருத்துவமனையில் வைத்து மறு நாள் காலை 08.30 மணிக்கு போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் மரக்கட்டை மற்றும் கம்பியால்

தான் அன்று என்னை அடித்தார்கள். **மரக்கட்டை அ.சா.பொ.1 மற்றும் கம்பி அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**நீதிமன்ற கேள்வி**

1. கேள்வி – இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளவர்கள் பெயர் என்ன ?

   பதில் – துக்கராஜ் மற்றும் மாசி. மாசி என்பவர் என்னை அடிக்கவில்லை.

2. கேள்வி – சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் வேறு யார் அடித்தார்கள் ?

   பதில் – கண்ணாடிப்புத்தூரைச் சேர்ந்த மாசிலாமணி என்ற வேறு ஒரு பையன், சமத், கணேசன் மற்றவர்கள் பெயர்கள் ஞாபகம் இல்லை.

3. கேள்வி – அந்த மூன்று நபர்களின் அப்பா பெயர் தெரியுமா ?

   பதில் – தெரியாது.

**வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளதாக சாட்சியால் குறிப்பிடப்பட்ட நபர்களுக்குஅழைப்பாணை அனுப்புவதற்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.10 16:43:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்